இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

மட்டம் 05 - இறுதிப்பரீட்சை 2008

**ESU 3212 – கல்வி அடிப்படைகள்**

**காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்**

திகதி. 26.08.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இலிருந்து சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. கல்வியின் மூன்று பிரதான தொழிற்பாடுகளை குறிப்பிடுக.

2. "முறைசாராக் கற்றல்" என்ற எண்ணக்கருக்களை பொருத்தமானதொரு உதாரணத்துடன் விளக்குக.

3. "மேலிருந்தான சமூக நகர்வு" , "கீழிலிருந்தான சமூக நகர்வு" என்பதனை வேறுபடுத்துக.

4. கல்வி சார் நோக்கங்களை உருவாக்குவதற்கு தேவையை ஏற்படுத்தும் மூன்று காரணிகளை தருக.

5. இலங்கையில் திறந்த தொலைக்கற்றலில் உள்ள மூன்று நன்மைகளைக் குறிப்பிடுக.

6. "கல்வியானது உள்ளீட்டு – வெளியீட்டு செயன்முறையொன்றாக கருதப்படக்கூடியது" இக் கூற்றினை ஆராய்க.

7. பாடசாலை செல்லும் வயதுடைய ஒவ்வொரு பிள்ளையையும் பாடசாலை செல்ல வைப்பது ஏன் கடினமாக உள்ளது? இரு காரணிகளை தருக.

8. பண்பாடு மற்றும் சமூகமயப்படுத்தல் ஆகியவற்றிக்கிடையிலான இடைத் தொடர்பினை விளக்குக.

5 × 8 = 40 புள்ளிகள்

## பகுதி II

9\. I. "பிள்ளையொன்றின் மொத்த விருத்தி" என்ற எண்ணக்கருவின் மூலம் நீங்கள் உண்மையில் விளங்கிக் கொள்வதென்ன? விளக்குக. (05 புள்ளிகள்)

II. இவ் எண்ணக்கருவினை விருத்தி செய்வதில் ரூசோ, டூயி, மகாத்மா காந்தி ஆகியோர்களது கொள்கைகள் எவ்வாறு பங்களித்தன என்பதை ஆராய்க. (15 புள்ளிகள்)

10. I. விழுமியக் கல்வி என்பதை வரைவிலக்கணம் செய்க. (04 புள்ளிகள்)

II. இலங்கையின் தற்போதைய இடைநிலைக் கல்வியில் விழுமியக் கல்விக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை விமர்சனரீதியாக ஆராய்க. (08 புள்ளிகள்)

III. பண்பு பயிற்சியாளர் என்ற வகையில் ஆசிரியரொருவரின் வகிபங்கினை விளக்குக. (08 புள்ளிகள்)

11. I. சமூகமயப்படுத்தல் நிகழும் சூழலமைவுகளை விளக்குக. ((04 புள்ளிகள்)

II. பிள்ளைகளது சமூகமயமாக்கலில் பாடசாலைக்குள்ளும், பாடசாலைக்கு வெளியேயும் சமவயதுக் குழுக்கள் கொண்டுள்ள வகிபங்கினை விமர்சனரீதியாக ஆராய்க. (08 புள்ளிகள்)

III. வகுப்பறையில் சமவயதுத் தொடர்பினை நீங்கள் எவ்வாறு மேம்படுத்துவீர்கள் என்பதை விபரிக்குக. (08புள்ளிகள்)

12. I. பாடசாலை மற்றும் சமுதாயம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

II. இலங்கைப் பாடசாலைகளது வளர்ச்சிக்கு சமுதாயம் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை உதாரணங்களுடன் சுருக்கமாக ஆராய்க (12 புள்ளிகள்)

13. I. பிள்ளைகளது கல்விபேறுகளில் சமூக வகுப்புகள் கொண்டுள்ள செல்வாக்குகளை இலங்கையுடன் தொடர்புபடுத்தி விமர்சன ரீதியாக ஆராய்க. (08 புள்ளிகள்)

II. சமூகத்தகவினை மேம்படுத்துவதற்கு கல்வி எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை ஆராய்க. (12 புள்ளிகள்)

14. பின்வரும் கூற்றுக்களில் இரண்டிற்கு கருத்துரைக்குக.

I. கல்விக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையில் உள்ள பொருத்தமற்ற நிலை நாடொன்றின் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்துகிறது.

II. இலங்கைப்பாடசாலைகள், தேசிய ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் மேம்படுத்துவதில் தலையாய வகிபங்கை ஆற்ற வேண்டும்.

III. வாழ்நாள் முழுதும் கல்வி என்ற கருத்து கற்றல் சமூகத்திற்கான பிரதான படியாகும். $10 \times 2 = 20$ புள்ளிகள்

(பதிப்புரிமையுடையது)